தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

23.03.2013 A.M

# வறட்சியால் 72,882 ஹெக்டேர் விவசாயம் பாதிப்பு: நாமக்கல் மாவட்டத்தில் அமைச்சர்கள் குழு ஆய்வு



நாமக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக அமைச்சர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கணக்கெடுப்புக்குப் பிறகு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று அந்தக் குழுவின் தலைவர் நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 900 மில்லி மீட்டர். கடந்த ஆண்டு, ஜனவரி முதல் டிசம்பர் வரை 486 மிமீ மழை மட்டுமே பெய்தது. அதற்கு முந்தைய 2011-ஆம் ஆண்டில் 722 மிமீ மழை பெய்தது. இரு ஆண்டுகளாகப் பருவமழை பொய்த்ததால் இந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரம் அடிக்கு கீழே சென்றுவிட்டது. இதனால், கடந்த ஆண்டில் மாவட்டம் முழுவதும் 72,882 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்ட நெல், பாசிப் பயிறு, நிலக்கடலை, சோளம், கரும்பு, பருத்தி, தென்னை மற்றும் வெங்காயப் பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் மேட்டூர் கிழக்குக் கரை பாசனப் பகுதிகளில் மட்டும் 10 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 894 விவசாயிகள் பெருமளவில் நஷ்டமடைந்துள்ளதாக வருவாய்த் துறை கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

இந்த நிலையில், நாமக்கல் மாவட்ட வறட்சி பாதித்த விவசாய நிலங்களைத் தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான உயர்நிலைக் குழு வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டது.

மின்சாரத் துறை அமைச்சர் நத்தம் ஆர்.விஸ்வநாதன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, வீட்டு வசதித் துறை அமைச்சர் வைத்திலிங்கம், வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன், வருவாய்த் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் ராசிபுரம் வட்டம், கவுண்டம்பாளையம், புதுச்சத்திரம், நவனி, உஞ்சனை, கருமகவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட நிலக்கடலை, தென்னையை பார்வையிட்டனர். பின்னர் விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தினர். அவர்கள் அளித்த குறைகள் அடங்கிய மனுக்களையும்

பெற்றனர்.

விவசாயிகள் புகார்: இதுகுறித்து விவசாயிகள் கூறியது: வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த கணக்கெடுப்பில் குளறுபடி ஏற்பட்டுள்ளது. மரவள்ளிக் கிழங்கு, வெங்காயம், தென்னை ஆகியவை அதிகம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் குறைந்த அளவே கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது.

இதனால், உண்மையிலேயே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, கணக்கெடுப்பை மீண்டும் சரிவர மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்கவேண்டும் என்றனர்.

கணக்கெடுப்புக்குப் பின்னர் நிவாரணம்: இதையடுத்து, அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறியது: தமிழகத்துக்கு உரிய தண்ணீரை கர்நாடகம் வழங்காததால், காவிரி டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டன. அத்துடன், பருவமழை பொய்த்ததாலும் தமிழகம் முழுவதும் வறட்சி ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, சென்னை தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். அதனால், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை வழங்கப்படும் என்றார் அவர்.

கூடுதல் தலைமைச் செயலர் டி.எஸ்.ஸ்ரீதர், வருவாய்த் துறை முதன்மைச் செயலர் ராஜீவ் ரஞ்சன், வேளாண் துறைச் செயலர் சஞ்சீப் சக்சேனா, இயக்குநர்கள் விஜயகுமார் (ஊரக வளர்ச்சி), ராஜேந்திரன் (வேளாண்மை), பழனிச்சாமி (கால்நடை பராமரிப்பு), உணவுப்பொருள் வழங்கல் ஆணையர் சிவராஜ் மீனா, ஆட்சியர் டி.ஜகந்நாதன், எம்எல்ஏ கே.பி.பி.பாஸ்கர் உள்ளிட்டோர் இந்த ஆய்வின் போது உடனிருந்தனர்.நாமக்கல் மாவட்டம், உஞ்சனை பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களைப் பார்வையிடும் அமைச்சர்கள்.

**வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் முற்றுகை**

சிதம்பரம் அருகே கீரப்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கம் முன்பு வறட்சி நிவாரணத் தொகைப் பெற டோக்கன் வழங்கியும் கடந்த ஒரு மாதமாக நிவாரணத் தொகை வழங்காததைக் கண்டித்து விவசாயிகள் வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிதம்பரம் அருகே உள்ள மேலமூங்கிலடி கிராமத்தில் 169 பேருக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்க வேளாண் அதிகாரிகள் மூலம் டோக்கன் வழங்கப்பட்டது.

ஆனால் டோக்கன் வழங்கி ஒரு மாதமாகியும் கீரப்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் பணம் தரவில்லை.

இதனால் மார்க்சிஸ்ட் கட்சி புவனகிரி ஒன்றியச் செயலரும், மேலமூங்கிலடி ஊராட்சி மன்றத் தலைவருமான சதானந்தம் தலைமையில் விவசாயிகள் வெள்ளிக்கிழமை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் சாலைமறியலில் ஈடுபடப் போவதாக அறிவித்தனர்.

தகவல் அறிந்த புவனகிரி போலீஸ் இன்ஸ்பெக்டர் அறிவானந்தம், கூட்டுறவு வங்கிச் செயலர் செந்தில்குமார் மற்றும் போலீஸார் சென்று விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின்னர் விவசாயிகளுக்கு நிவாரணத் தொகை உடனடியாக வழங்குவதாக தெரிவித்ததை அடுத்து போராட்டத்தை விவசாயிகள் வாபஸ் பெற்று, வங்கிக்குச் சென்று நிவாரணத்தொகையை பெற்றுச் சென்றனர்.

போராட்டத்துக்குப் பின்னர் மேலமூங்கிலடி கிராம விவசாயிகள் 161 பேருக்கு, ரூ.21.49 லட்சம் வழங்கப்பட்டதாக தெரிகிறது.

### 27-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வரும் 27-ஆம் தேதி காலை 10 மணிக்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் நடைபெறும்.

இதில் விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க வாய்ப்பு வழங்கப்படும். கூட்ட அரங்கில் கோரிக்கைளைத் தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 10.30 மணிக்குள் தங்கள் பெயர், கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம் என ஆட்சியர் அலுவலகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கரும்பு விவசாயிகள் கூட்டத்தில் கூச்சல், குழப்பம்

கூட்டுறவு சர்க்கரை ஆலையா? தனியார் சர்க்கரை ஆலையா? என்று காஞ்சிபுரத்தில் வெள்ளிக்கிழமை நடந்த கருத்து கேட்புக் கூட்டத்தில் விவசாயிகளிடையே பெரும் கூச்சல், குழப்பம் ஏற்பட்டது. இதை சமாளிக்க முடியாத உத்தரமேரூர் சட்டப்பேரவை உறுப்பினர் வாலாஜாபாத் கணேசன் வெளியேறினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் அருகே படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை காமராஜர் ஆட்சி காலத்தில் செயல்படத் தொடங்கியது. பல்வேறு நிர்வாக குளறுபடி காரணமாக இந்த ஆலை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு இழுத்து மூடப்பட்டது. இதைத் தொடர்ந்து வாலாஜாபாத் அருகே செயல்படும் தனியார் எஸ்.வி. சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் கரும்பை வழங்கினர்.

இந்த நிலையில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் பகுதி விவசாயிகள் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, உத்தரமேரூர் பகுதி விவசாயிகள் தனியார் எஸ்.வி. சர்க்கரை ஆலைக்கும் கரும்பு சப்ளை செய்ய வேண்டும் என்று சர்க்கரை துறை ஆணையம் அறிவித்தது. இதற்கு உத்தரமேரூர் பகுதி விவசாயிகளிடையே எதிர்ப்பு கிளம்பியது.

உத்தரமேரூர் பகுதி விவசாயிகள் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குத்தான் தாங்கள் விளைவித்த கரும்புகளை வழங்குவது என்று சர்க்கரை துறை ஆணையருக்கு மனு அளித்தனர். படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் உத்தரமேரூர் பகுதி விவசாயிகளிடம் தாங்கள்தான் கரும்பு கொள்முதல் செய்வோம் என்று வலியுறுத்தி வந்தது. இதைத் தொடர்ந்து விவசாயிகளிடையே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்துக்கு சர்க்கரைத்துறை ஆணையர் உத்தரவிட்டார்.

ஆட்சியர் வரவில்லை: இதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் அண்ணா அரங்கில் வெள்ளிக்கிழமை இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் லி. சித்ரசேனன் அலுவல் பணி காரணமாக கூட்டத்துக்கு வரவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கூட்டத்தைப் புறக்கணிக்க முடிவு செய்தனர். தொடர்ந்து அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டது.

தனியார் ஆலைகள் வேண்டுவோரும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வேண்டுவோரும் தங்களது கோரிக்கைகளை மனுவாகவும், கருத்துகளையும் தெரிவிக்கலாம் என்று அறிவித்தனர். அப்போது கட்சி பணிக்காக அண்ணா அரங்கம் வந்த உத்தரமேரூர் சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் வாலாஜாபாத் கணேசன் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

எம்.எல்.ஏ. வெளியேறினார்: உத்தரமேரூர் தாலுக்கா சாத்தனஞ்சேரியைச் சேர்ந்த விவசாயி எஸ். தனபால் பேசியது: தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் சிறப்பாக செயல்படுகிறது. கரும்பு அறுவடைக்கு ஆள்கள் கிடைக்காத இந்த நேரத்தில், ஆலை நிர்வாகம் கரும்பு வெட்டும் எந்திரம் கொடுத்து உதவுகிறது. மேலும் ரூ. 340 கோடி கடனில் உள்ள படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நம்பி எவ்வாறு கரும்பு சப்ளை செய்வது என்று அவர் பேசும்போது, எதிர்தரப்பு விவசாயிகள் எழுந்து கூச்சலிட்டனர். மேலும் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பல குறைகள் இருந்தாலும், இப்போது நல்ல நிலையில் செயல்படுகிறது, இந்த நிலையில் கூட்டுறவு சர்க்கரை ஆலையை தரக்குறைவாக பேசுவது எப்படி நியாயம் என்றனர். இதனால் இரு தரப்பினருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதிகாரிகள் மற்றும் வாலாஜாபாத் கணேசன் எம்.எல்.ஏ. ஆகியோர் விவசாயிகளை சமாதானம் செய்தனர். ஆனால் விவசாயிகளை சமாளிக்க முடியவில்லை. இதனால் வாலாஜாபாத் கணேசன் எம்.எல்.ஏ. கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

போலீஸ் வருகை: இதைத் தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் போலீஸாரின் உதவியை நாடினார். டி.எஸ்.பி. சந்திரசேகர் தலைமையில் போலீஸார் அண்ணா அரங்கம் வந்தனர். ஆனால் அதற்குள் விவசாயிகள் சமாதானம் அடைந்தனர். அதைத் தொடர்ந்து விவசாயிகளின் நடவடிக்கைகள் விடியோவில் பதிவு செய்யப்பட்டன. அதற்கு பிறகுதான் விவசாயிகள் ஒருவர் பின் ஒருவராக தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர்.

விவசாயிகளிடம் கருத்துகளை கேட்டபின் கூட்டுறவு சர்க்கரை ஆலை தனி அலுவலர் தமிழ்செல்வி பேசியது: பல்வேறு காரணங்களால் மூடப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை கடந்த 2011 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆனால் அரவைக்கு போதுமான கரும்பு கிடைப்பதில்லை. எனவே மீண்டும் உத்தரமேரூர் பகுதி விவசாயிகளிடம் இருந்து கரும்பு கொள்முதல் செய்தால்தான் நல்ல முறையில் ஆலையை இயக்கமுடியும். உத்தரமேரூர் பகுதியில் இருந்து கரும்பு கொள்முதல் செய்தால் நவம்பரில் இருந்து ஆலையை இயக்க முடியும் என்றார்.

எஸ்.வி. சர்க்கரை ஆலை தனி அலுவலர் தம்புசாமி: 6,500 டன் அரவை திறன் கொண்ட ஆலையாக செயல்படுகிறது. சித்தஞ்சேரி, உத்தரேமேரூர் பகுதிகளில் இருந்து கொள்முதல் செய்தால்தான் ஆலையை இயக்க முடியும். மேலும் இந்த ஆலை மூலம் 43.3 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. போதிய கரும்பு கிடைக்கவில்லை என்றால் மின்சார உற்பத்தி கேள்விக்குறியாகும் என்றார்.

இதைத் தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் பேசியது: இருதரப்பினரின் கருத்துகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கூட்டுறவு சர்க்கரை ஆலை தரப்பில் 751 மனுக்களும், தனியார் சர்க்கரை ஆலை தரப்பில் 2 மனுக்களும் பெறப்பட்டுள்ளன. இரு தரப்பு கருத்துகளையும் தமிழக அரசுக்கு அனுப்பப்படும் என்றார்.

**கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு உதவிகளை செய்ய வேண்டும்**

கால்நடைகளுக்கான நோய்த் தடுப்பு உதவிகளை உடனுக்குடன் செய்ய வேண்டும் என்று கால்நடைத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா வலியுறுத்தினார்.

விழுப்புரம் மாவட்டம் மருதூரில் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் பொதுமக்களுக்கு கால்நடை பராமரிப்பு, பண்ணை பராமரிப்புக்கான ஆலோசனை, நோய் தடுப்புக்கான சிகிச்சை முறைகள், கடன் திட்டம், கால்நடை பயிற்சிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இந்த மையத்தை ஊரகத் தொழில்துறை அமைச்சர் ப.மோகன், கால்நடைத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா ஆகியோர் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர்.

அப்போது ஆய்வு மையத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் நோய் தடுப்பு குறித்து தகவல் அளிக்கும் தொடுதிரை கணினி மையத்தை தொடங்கி வைத்து அமைச்சர் டி.கே.எம்.சின்னையா பேசியது:

விழுப்புரம் மாவட்டத்தில் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையத்தின் மூலம் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் அதிக அளவில் பயன் பெறுவார்கள். கால்நடை வளர்ப்பு குறித்து மையத்துக்கு வரும் பயிற்சியாளர்களுக்கு சிறப்பான பயிற்சிகளை அதிகாரிகள் வழங்க வேண்டும்.

மேலும் கால்நடைகளுக்கான நோய் தடுப்பு உதவிகளை உடனுக்குடன் செய்துக் கொடுக்க வேண்டும் என்றார் அவர்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் வா.சம்பத், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ரா.குமரகுரு, என்.ஐ.ஜானகிராமன், நகர்மன்றத் தலைவர் ஜி.பாஸ்கரன், கால்நடை பல்கலைக்கழக துணைவேந்தர் பிரபாகரன், கால்நடை பல்கலைக்கழக இயக்குநர் சந்திரகாசன், மையத் தலைவர் வெங்கடபதி, மண்டல இணை இயக்குநர் கே.அழகரசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பெண்களுக்கு 33 % இட ஒதுக்கீடு மசோதா: வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் வலியுறுத்தல்



நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாவை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என வேளாண் விஞ்ஞானியும், மாநிலங்களவை உறுப்பினருமான எம்.எஸ். சுவாமிநாதன் வலியுறுத்தி உள்ளார்.

மாநிலங்களவையின் நியமன உறுப்பினரான அவரது பதவிக்காலம் வரும் ஏப்ரல் மாதத்தோடு நிறைவடைகிறது.

அவையில் அவருக்கு நடைபெற்ற பிரிவு உபசார விழாவில் பங்கேற்ற அவர் பேசியதாவது: கடந்த மார்ச் 2010-ம் ஆண்டு பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தது எனது பதவிக்காலத்தில் முக்கியமான ஒன்றாக கருதுகிறேன்.

விரைவில் மக்களவையிலும் அம்மசோதா நிறைவேற்றப்படும் என நம்புகிறேன்.

இதன் மூலம் உயர் அதிகார பதவிகளிலும் பெண்களுக்கு சம வாய்ப்பு கிடைக்கும்.

அப்போது அவையில் இருந்த பிரதமர் மன்மோகன் சிங் உள்பட அனைத்து உறுப்பினர்களும் மேஜையைத் தட்டி தங்கள் வரவேற்பை தெரிவித்தனர். வேளாண் விஞ்ஞானியான தன்னை நியமன உறுப்பினராக தேர்வு செய்ததற்காக பிரதமருக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

தான் கொண்டு வந்த தனிநபர் மசோதாவான பெண் விவசாயத் தொழிலாளர் நலனுக்கான மசோதா விவாதத்துக்கே வரவில்லை என வேதனை தெரிவித்தார். மேலும் வேளாண் அமைச்சகத்தை சீரமைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

அப்போது அவையின் தலைவர் பொறுப்பில் இருந்த இ.எம்.எஸ். சுதர்சன நாச்சியப்பன் இந்தியாவின் பசுமைப்புரட்சிக்கு எம்.எஸ். சுவாமிநாதன் ஆற்றிய சேவையை பாராட்டினார்.

### தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ.3,500 ஆக உயர்த்த வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் மதுரையில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே திருவள்ளுவர் சிலை சந்திப்பு பகுதியில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் என்.பழனிசாமி தலைமை வகித்தார்.

மதுரை தெற்கு சட்டப் பேரவை உறுப்பினர் ஆர்.அண்ணாதுரை, கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் எம்.சக்திவேல், மாநிலக் குழு உறுப்பினர் பி.கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பழனிசாமி கூறியது:

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,500 வழங்கப்படும் எனப் பேரவைத் தேர்தலின்போது அ.தி.மு.க. வாக்குறுதி அளித்தது. ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த ஆண்டு ரூ.100-ம், நடப்பு அரவைப் பருவத்துக்கு மத்திய அரசு அறிவித்த கூடுதல் விலை ரூ.250 மட்டும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.2,350 மட்டும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கரும்பு வெட்டுக்கூலி மட்டும் டன் ஒன்றுக்கு ரூ.1200 ஆக அதிகரித்துள்ளது. உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருள்களின் விலை உயர்வை அரசு கவனத்தில் கொள்ளவில்லை.

கரும்பில் இருந்து உற்பத்தியாகும் சர்க்கரை தவிர, உபபொருள்களான எத்தனால், மொலாசஸ், உரம், கரும்புக் கழிவு ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்படும் மின்சாரம், இவற்றிலிருந்து கிடைக்கும் லாபத்தில் விவசாயிகளுக்கு எதுவும் கொடுப்பதில்லை. கடந்த காலங்களில் முத்தரப்பு கமிட்டியைக் கூட்டி, கரும்புக்கான கொள்முதல் விலையை தமிழக அரசு நிர்ணயம் செய்து வந்தது. ஆனால், இப்போது விவசாயிகளின் கருத்தைக் கேட்காமல் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டது நியாயமற்றது.

ஆகவே, 9.5 சதவீதம் பிழிதிறன் கொண்ட கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும். கரும்பு வெட்டுக் கூலியை சம்பந்தப்பட்ட ஆலைகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். விவசாயப் பம்பு செட்டுகளுக்கு தொடர்ச்சியாக மின்விநியோகம் செய்ய வேண்டும். தனியார் ஆலைகளுக்குச்

சாதகமான ரெங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தக் கூடாது ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்றார்.

### மாம்பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைத்தால் நடவடிக்கை: எஸ்.பி.

மாம்பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைத்து விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மதுரை ஊரகக் காவல் கண்காணிப்பாளர் வே.பாலகிருஷ்ணன் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

கோடைக்காலம் தொடங்கிய நிலையில் மாம்பழ விற்பனையும் தொடங்கியுள்ளது. பொதுமக்கள் மாம்பழம் தின்னும் ஆசையில் அவை செயற்கையான முறையில் பழுக்க வைக்கப்பட்டதா? என்பதை அறியாமல் வாங்கிச்செல்கின்றனர்.

வேதிப்பொருள் மூலம் செயற்கையான முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை உண்போருக்கு வயிற்று வலி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பாதிப்புகளும் ஏற்படுவதாகத் தெரிகிறது.

வியாபார நோக்கை மட்டும் கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலனைக் கருதாது செயற்கை முறையில் பழுக்க வைத்த மாம்பழங்களை விற்போர் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாய நிலங்களை கையகப்படுத்த தடை கோரி ஆட்சியரிடம் மனு

பழனி தேவஸ்தான தேவைக்காக 52 ஏக்கர் விவசாய நிலத்தை கையகப்படுத்தும் முயற்சிக்கு தடை விதிக்க வேண்டும் என விவசாயிகள் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனு குறித்து பழனி பரதமாநதி, ஒட்டபத்து, ஏரணைமடை, இடும்பன்குளம் நீரை பயன்படுத்தும் விவசாயிகள், நில உரிமையாளர்கள் நலச் சங்கத்தின் செயலர் சி.சிவக்குமார் செய்தியாளர்களிடம் கூறியது: பழனி தேவஸ்தானத்தின் தேவைகளுக்காக, இருபோகம் விளையக் கூடிய சுமார் 52 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்துவதற்கு கடந்த ஆட்சியில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதி வழங்குவதற்கு முன் அந்த நிலங்களின் உரிமையாளர்களிடமோ, விவசாயிகளிடமோ கருத்து கேட்கவில்லை.

இந்த நிலங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு சொந்தமானவை. மேலும், அவர்களின் எதிர்கால வாழ்வாதாரத்துக்கு இந்த நிலங்கள் மட்டுமே உள்ளது.

அதேபோல், இந்த விளைநிலங்களை மறித்து கட்டடங்கள் கட்டுவதற்கு, பொதுப்பணித்துறை தடை விதித்துள்ளது. இந்நிலையில் இந்த நிலங்களை, தேவஸ்தான நிர்வாகம் கையகப்படுத்தும்போது, இடும்பன்குளம் பயனற்று, தூர்ந்து போகும் நிலை உள்ளது. இதன்மூலம் சுற்றுவட்டாரப் பகுதியின் நிலத்தடி நீர் முழுமையாக பாதிக்கப்படும் ஆபத்தும் உள்ளது.

ஏற்கனவே தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் பல்வேறு இடங்கள் உள்ளதால், அவற்றை முறைப்படுத்தி, பயன்படுத்த வாய்ப்புள்ளது. எனவே குறிப்பிட்ட 52 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு தடை விதிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை வைத்துள்ளோம் என தெரிவித்தார்.

விவசாயத்துக்கு வங்கிக் கடன் வழங்க 22.6 சதவிகிதம் கூடுதல் நிதி ஒதுக்கீடு

தேனி மாவட்டத்தில் விவசாயத் தொழிலுக்கு வங்கிக் கடன் வழங்க, கடந்த நிதியாண்டை விட 2013-14 ஆம் நிதியாண்டில் 22.6 சதவிகிதம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்தார்.

தேனியில் வங்கிப் பணிகள் வளர்ச்சி குறித்த ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மகேந்திரன் வரவேற்றார். ரிசர்வ் வங்கி மண்டல மேலாளர் பங்கஜ்குமார், கனரா வங்கி முதன்மை மேலாளர் ஹரிராம் ஷெனாய், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில், 2013-14 ஆம் நிதியாண்டுக்கான வங்கிகளின் கடன் திட்டத்தை ஆட்சியர் வெளியிட்டார். கனரா வங்கி துணைப் பொது மேலாளர் லட்சுமிபதிகுமார் கடன் திட்டத்தை பெற்றுக்கொண்டார். பின்னர் ஆட்சியர் கூறியது: மாவட்டத்தில் விவசாயத் தொழிலுக்கு வங்கிக் கடன் வழங்க கடந்த நிதியாண்டை விட இந்த ஆண்டு 22.6 சதவிகிதம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விவசாயத் தொழிலுக்காக மொத்தம் ரூ. 2,250 கோடியே 89 லட்சம் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பண்ணைசாராத் தொழில்களுக்கு ரூ. 154 கோடியே 74 லட்சமும், முன்னுரிமைக் கடன்களுக்கு ரூ. 301 கோடி கடனும் வழங்கப்பட உள்ளது என்றார்.

வறட்சி பாதிப்பு: ஆய்வுக் குழு மீது புகார் தெரிவித்து விவசாயிகள் வெளிநடப்பு

தேனி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்தும், அமைச்சர் குழுவினர் பார்வையிட்டும், நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகப் புகார் தெரிவித்து, வெள்ளிக்கிழமை தேனியில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தை புறக்கணித்து விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர்.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. விஜயாராணி, வேளாண்மைத் துணை இயக்குநர் சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ. முத்தையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டம் தொடங்கியதும், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் டி. கண்ணன் பேசியது: தேனி மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், விவசாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக அரசு அறிவித்துள்ளது.

இருப்பினும், வறட்சி பாதிப்புகளை ஆய்வு செய்தவற்கான அமைச்சர் குழுவினர், மாவட்டத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்காமல் புறக்கணித்து வருகின்றனர். அரசு உத்தரவின்படி, கிராம நிர்வாக அலுவலர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு, தகவலை முறையாக பதிவு செய்யாததால், தேனி மாவட்டம் புறக்கணிக்கப்படுவதாக, விவசாயிகளுக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளை அமைச்சர் குழுவினர் உடனடியாகப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய வலியுறுத்தி, இந்தக் கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்கிறோம் என்றார்.

இந்தக் கருத்தை ஆதரித்து, கூட்டத்துக்கு வந்திருந்த விவசாயிகளில் 15-க்கும் மேற்பட்டோர் வெளிநடப்பு செய்தனர். இந்த சம்பவத்தால், கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

## நடமாடும் மண் பரிசோதனை வாகனங்கள்

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 5 நடமாடும் மண் பரிசோதனை வாகனங்களை, வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் சனிக்கிழமை தொடங்கி வைத்தார்.

தேசிய மண் வளம் மற்றும் நல மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.2 கோடி செலவில் இவ்வாகனங்கள் தயாரிக்கப்பட்டன.

தமிழக சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் வேளாண் துறை இயக்குநர் ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் மு.கருணாகரன், மேயர் செ.ம. வேலுசாமி, பொள்ளாச்சி எம்.பி. கே.சுகுமார், வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கே.ராமசாமி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.பி. வேலுமணி, மலரவன், சேலஞ்சர் துரை ஆகியோர் பங்கேற்றனர்.

## வறட்சி இழப்பீடு: ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வலியுறுத்தல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட திருப்பூர் மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கோவிந்தராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை குறைதீர் கூட்டம் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜா.சம்பத், வேளாண்மை இணை இயக்குநர் முகம்மது கலிபுல்லா ஷெரீஃப், துணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன், அரசு அலுவலர்கள், விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

பல்வேறு பிரச்னைகள் குறித்து விவசாயிகள் பேசியது:

மனோகரன்: கடும் வறட்சியால் மக்காச்சோளம் மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து ஆய்வுக் குழுவினரிடம் தெரிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துரைசாமி: திருமூர்த்திமலை பகுதியில் இருந்து பொதுப்பணித்துறை அனுமதியுடன் இலவசமாக வண்டல் மண் எடுத்து விவசாய நிலங்களுக்கு உரமாக பயன்படுத்தப்பட்டது. தற்போது மண் எடுக்க அனுமதிப்பதில்லை. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

பாலசுப்பிரமணியம்: தமிழகத்தில் வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருப்பூர் தான். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

சுப்பிரமணி: அவிநாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் சிட்டா அடங்கல் பெற ரூ.20 வசூல் செய்கின்றனர். அதற்கு ரசீது வழங்காமல் வெள்ளைத் தாளில் ரூ.20 பெற்றுக் கொண்டதாக எழுதித் தருகின்றனர். இந்த பணம் எங்கு செல்கிறது என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

மணி: வறட்சி பாதிப்பு மாவட்டங்களில் திருப்பூரும் இடம்பெற்றுள்ளது. இந்த மாவட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். மானியத்துடன் கால்நடை தீவனம் வழங்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை பாதுகாக்க ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க மானியத்துடன் கடன் வழங்க வேண்டும்.

சர்க்கார் பெரியபாளையம் குளத்தில் தேங்கியுள்ள சாயக் கழிவுநீரை அப்புறப்படுத்தி, பரம்பிக்குளம்-ஆழியாறு வாய்க்கால் தண்ணீரை ஆண்டுக்கு ஒரு முறை நிரப்ப வேண்டும். குளம், குட்டைகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

ஆட்சியர்: இதற்கான நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும். இதுவரை பெறப்பட்ட 513 மனுக்களில் 325 மனுக்களுக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### காய்ந்த தென்னை மரத்துக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வலியுறுத்தல்

காய்ந்துபோன தென்னை மரத்துக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பல்லடம் அருகே பொங்கலூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட அவினாசிபாளையத்தில் குட்டை தூர்வாரும் பணியை ஆய்வு செய்ய வெள்ளிக்கிழமை வந்த நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான உயர்மட்டக் குழுவினரிடம், திருப்பூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் தங்கவேல், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் மோகன், செயலாளர் மதுசூதனன், பொங்கலூர் லோகநாதன் ஆகியோர் கோரிக்கை மனு அளித்தனர்.

மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: திருப்பூர் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் காய்ந்துவிட்டன. போதிய நீர் இல்லாததால் பல்லாயிரக்கணக்கான மரங்கள் காய்ப்புத் திறனை இழந்துள்ளன. 2002 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதைபோல நிவாரணம் வழங்க வேண்டும்.

காய்ந்த தென்னை மரம் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரமும், காய்ப்பு இழந்த மரம் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரமும், காய்ந்துபோன கரும்புக்கு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரமும், நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரமும், பயிர் செய்யாமல் இருக்கும் விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரமும், வாழை,

மஞ்சள், மரவள்ளிக்கிழங்கு உள்ளிட்ட ஆண்டு பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.75 ஆயிரமும், மானாவாரி பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

கால்நடைகளுக்கு போதிய தீவனத்தை அரசு வழங்க வேண்டும். கோடை வெப்பத்தால் கால்நடைகளுக்கு ஏற்படும் காய்ச்சல், வெக்கை, கழிச்சல் உள்ளிட்ட நோய்கள் வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பவானிசாகர் நீர்மட்டம் 40.45 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 40.45 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,237 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.53 டி.எம்.சி.

## கொருக்கை கிராமத்தில் மணிலா வயல் விழா

செய்யாறை அடுத்த கொருக்கை கிராமத்தில் மணிலா வயல் விழா வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

செய்யாறு வட்டார மணிலா விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், மணிலா உற்பத்தியைப் பெருக்கும் வகையிலும் இவ்விழா கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி தலைமை தாங்கினார்.

திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி (உதவி பேராசிரியர்) ம.வைத்தியலிங்கம், மணிலாவில் புதிதாக வந்துள்ள ரகங்களான டி.எம்.வி.13 (சிகப்பு நிலக்கடலை), புதிய உயர்விளைச்சல் தரக்கூடிய கொத்து ரகமான ஐ.சி.ஜீ.வி. 00351 ஆகியவற்றின் சிறப்பியல்புகளை விவசாயிகளிடம் தெரிவித்தார்.

மேலும் விதைக்கும் கருவியான டிராபிகுலேட்டர், மணிலா கொடியிலிருந்து காய்களைப் பிரித்தெடுக்கும் கருவியின் செயல்பாடுகள் குறித்து ஒலி, ஒளி காட்சி மூலம் விவசாயிகளுக்கு விளக்கினார்.

வேளாண் அறிவியல் மையத்தைச் சேர்ந்த முருகேசன், உதவி அலுவலர் ஜெயக்குமார், இளநிலை உதவி ஆராய்ச்சியாளர் ஜெயக்குமார் ஆகியோர் மணிலா சாகுபடி குறித்து விளக்கம் அளித்தனர்.

கொருக்கை ஊராட்சி மன்றத் தலைவர் ஹேமமாலினி மற்றும் செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த மணிலா விவசாயிகள் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

## 17 வாய்க்கால்களை தூர்வார வேண்டும்

கோடையைப் பயன்படுத்தி காவிரியின் கரையோரத்தில் உள்ள 17 வாய்க்கால்களை தூர்வார வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

கவுண்டம்பட்டி சுப்பிரமணியன் (டெல்டா விவசாயிகள் நலச் சங்கம்): திருச்சி மாநகராட்சியில் கழிவுநீர் உய்யக்கொண்டான் வாய்க்காலில் கலப்பதை தடுக்க வேண்டும். கோடைக்காலத்தைப் பயன்படுத்தி 17 வாய்க்கால்களையும் தூர்வார வேண்டும். வறட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு நிலுவையின்றி வழங்க வேண்டும்.

மாசிலாமணி (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): திருச்சி மாவட்டத்தில் நெல் தவிர கம்பு, சோளம், கேழ்வரகு, பருத்தி, வெங்காயம், மரவள்ளி என பல்வேறு பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். இந்தப் பயிர்களும் தற்போது நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

புலியூர் ஏ. நாகராஜன் (காங்கிரஸ் விவசாயப் பிரிவு): காவிரி கரையோர பாசன வாய்க்கால்களான 17 கிளை வாய்க்கால்கள், உய்யக்கொண்டான், கட்டளை, அய்யன்வாய்க்கால் உள்ளிட்டவைகள் மூலம் பாசனம் பெறும் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழைப் பயிர்கள் நீரின்றி காய்ந்து வருகின்றன. அதை காப்பாற்ற மேட்டூர் அணையிலிருந்து 1,000 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும்.

அயிலை சிவ. சூரியன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்): முதல்வர் தொகுதியில் உள்ள பேட்டைவாய்த்தலை, அணலை, புலிவலம், குழுமணி, கோப்பு, எட்டரை, முள்ளிக்கரும்பூர், கொத்தட்டை, வயலூர், சோமரசம்பேட்டை உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு நிலத்தடி நீரை மேம்படுத்தும் வகையில் வாய்க்கால்களில் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி. அய்யாக்கண்ணு (பாரதீய கிசான் சங்கம்): வறட்சியால் விவசாயிகள் செய்த செலவு கூட கிடைக்காமல் கஷ்டப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனுக்காக விவசாயிகளின் படங்களை வெளியிடுவோம் என மிரட்டுவதை நிறுத்த வேண்டும் என்றார்.

பூ. விசுவநாதன் (ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்கம்): கிணற்றுப் பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகள் ஆழ்குழாய் கிணறு வெட்டவும், ஏற்கெனவே வெட்டப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்தவும் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்க வேண்டும். மாட்டுத் தீவனம் விலை உயர்ந்து விட்டதால் கால்நடைகளை பராமரிப்பது பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

என். வீரசேகரன் (அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்கம்): அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணத் திட்டம் விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. பயிர் சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும். கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமிருந்து ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர். அனைத்துத் துறை அதிகாரிகள் பங்கேற்று விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதிலளித்தனர்.

ரூ.33.18 கோடி வறட்சி நிவாரணம் வழங்கல்: மாவட்ட ஆட்சியர்

திருச்சி மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக இதுவரையில் ரூ. 33.18 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன். மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர் பேசியது:

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாயிகள் பெற்ற கடன்களுக்காக, ஜப்தி உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என வங்கியாளர்களுக்கு ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாழைப் பயிர்களுக்கு தண்ணீர் தேவை குறித்து விவசாயிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து, தண்ணீர் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஏற்கெனவே அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்துக்கு வறட்சி நிவாரணத் தொகையாக ரூ. 33.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் இதுவரையில் ரூ. 33.18 கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளது. காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையை அளிக்க ஒப்புதல் கடிதம் அளிக்காத விவசாயிகளுக்கு மட்டுமே நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது. திருச்சி மாவட்டத்தில் மட்டும் 11,000 விவசாயிகள் காப்பீடு செய்யவில்லை. அரசே பயிர் காப்பீட்டுப் பிரியமியம் செலுத்திய நிலையில் விவசாயிகள் ஏன் காப்பீடு செய்யவில்லை என்பது தெரியவில்லை. இருப்பினும், காப்பீடு செய்யாத விவசாயிகளுக்கும் விரைவில் நிவாரண உதவி வழங்கப்படவுள்ளது என்றார் ஆட்சியர்.

### தோட்டக்கலை பயிர் சாகுபடி குறித்த பயிற்சி முகாம்

கரூர் மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர் சாகுபடி குறித்த 2 நாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பை அதிரிப்பது, உற்பத்தித் திறனை உயர்த்துவது ஆகியவை குறித்து தோட்டக்கலை பயிற்சி மையம் மூலம் தாந்தோணி வட்டாரம் ஓந்தாம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சியை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் வெ. சதாசிவம் தொடங்கிவைத்தார்.

தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் பயிற்சியின் முக்கியத்துவம்,

தோட்டக்கலைப் பயிர்களில் மேற்கொள்ள வேண்டிய புதிய உத்திகள் குறித்து பேசினார்.

வட்டாரத்திற்கு ஏற்ற காய்கறி பயிர்களில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய தொழில்நுட்பங்கள் குறித்து சரஸ்வதி வேளாண் விஞ்ஞான நிலைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகரன், பழப்பயிர் சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக உதவி இயக்குநர் முனியாண்டி ஆகியோர் விளக்கினார். இந்த வட்டாரத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு மத்திய, மாநில அரசு திட்ட

பயன்களை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து தாந்தோணி வட்டார துணை தோட்டக்கலை அலுவலர் ஜானகி விளக்கினார்.

2-ம் நாளில், கரூர் மாவட்டத்தில் உள்ள முன்னோடி தோட்டக்கலை விவசாயிகளின் வயல்களுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். விவசாயிகளின் வயலில் முக்கிய தோட்டக்கலை தொழில்நுட்பங்கள் குறித்து வயல்வெளி பயிற்சி அளிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி அலுவலர் லெனின், கு. கல்யாணசுந்தரம், இரா. பாலசுப்பிரமணியம் ஆகியோர் செய்தனர். இந்தப் பயிற்சியில் தாந்தோணி வட்டாரத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு செயல்விளக்கப் பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டம், வெண்ணாவல்குடி பகுதிக்கு களப்பயணம் மேற்கொண்டுள்ள திருச்சி அன்பில் தர்மலிங்கம் அரசு வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் தொழில் நுட்பம் குறித்த செயல் விளக்கப்பயிற்சி வியாழக்கிழமை அளிக்கப்பட்டது.

வேளாண்கல்லூரியில் வேளாண் பொறியியலில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவிகள் 100 பேர் புதுக்கோட்டை மாவட்டத்தில் களப்பயிற்சிக்கான பயணம் மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி குறித்த செயல் விளக்கமளிக்கப்பட்டது.

திருச்சி வேளாண் பொறியியல் துறை மண்டல கண்காணிப்பு பொறியாளர் லோகநாதன், புதுகை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அறிவழகன், உதவி செயற்பொறியாளர் ஜான்ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் ஆழ்குழாய்க்கிணறு அமைப்பதால் கிடைக்கும் நீண்டகாலப்பலன்கள், ஆழ்குழாய் கிணறு அமைப்பதில் அரசுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகள் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மை, தீமைகள், ஆழ்குழாய் கிணறு அமைக்கும் முறை, தேவையான உபகரணங்கள், செலவு உள்ளிட்டவை குறித்து விளக்கமளித்தனர்.

இதில், பள்ளித்தலைமையாசிரியர் டி. மனோன்மணி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மணிமொழிமனோகரன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வேண்டும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் நடைபெற்ற விவாதம்:

டி. பழனிமாணிக்கம்: வறட்சியால் மாட்டுத் தீவனப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சியர் கா. பாஸ்கரன்: பசுந்தீவனம் சாகுபடி செய்ய கால்நடை பராமரிப்புத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. கால்நடை பண்ணையில் 680 ஏக்கரில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெ. ஜீவகுமார்: மாவட்டத்தில் 3 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், 12,000 ஏக்கருக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது. மத்திய குழு பார்வையிட்ட ராயந்தூர், கோவில்பத்து, பூதராயநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் கூட வறட்சி நிவாரணம் முறையாக வழங்கப்படவில்லை. 50 %-க்கும் குறைவான பாதிப்பு ஏற்பட்டுள்ளவர்களுக்கும், தரிசாக விட்ட விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். வழங்கப்பட்ட நிவாரணத்திலும் குழப்பம் நிலவுவதால், மறு கணக்கெடுப்பு நடத்தி நிவாரணம் வழங்க வேண்டும்.

சாமி. நடராஜன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் நாள்தோறும் ஆட்சியரகத்தில் மனு அளித்து வருவதால், இதுகுறித்து மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். தூர்வாரும் பணிகளை ஏப்ரல் மாதத்திலேயே தொடங்க வேண்டும். இதற்கான நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, முறைகேடுகள் இல்லாமல் மேற்கொள்ள கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும்.

பி. சுகுமாரன்: அரசுக்குத் தவறான புள்ளிவிவரங்கள் அனுப்பப்பட்டதால் சம்பா சாகுபடியில் 70 % பாதிக்கப்பட்ட எனக்கு இழப்பீடு கிடைக்கவில்லை. இதுபோல சிறு, குறு விவசாயிகள் பாதிப்படைந்து பெரும் மன உளைச்சலுக்கும், பொருளாதார இழப்புக்கும் ஆளாகியுள்ளனர். இதனிடையே, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் கக்கரை ஆர். சுகுமாரன் தலைமையில் 4 விவசாயிகள் உடலில் நாமம் இட்டுக் கொண்டு, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என ஆட்சியரிடம் வலியுறுத்தினர். பின்னர், எங்களை மாவட்ட நிர்வாகம் ஏமாற்றிவிட்டது. கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்கிறோம் எனக் கூறி வெளிநடப்பு செய்தனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 28.60 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 28.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 80 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### வேளாண் கடன் நிதி ஒதுக்கீடு ஏமாற்றமளிக்கிறது'

தமிழக பட்ஜெட்டில், பயிர்க் கடனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ஏமாற்றத்தை அளிக்கிறது என்றார் காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச் செயலாளர் வி. தனபாலன் :

தமிழகத்தின் மொத்த உணவுத் தேவையில் சுமார் 52 % உற்பத்தி செய்யும் டெல்டா மாவட்டங்களின் தண்ணீர் சேமிப்பு கட்டமைப்புகளை மேம்படுத்த தேவையான அறிவிப்பு இல்லை.

வறட்சியால் 50 %-க்கு குறைந்த பாதிப்புக்குள்ளான விளை நிலங்களுக்கான நிவாரணம் குறித்தும், பிற மாவட்டங்களில் ஏற்பட்ட வேளாண் பாதிப்புகளுக்கான நிவாரண அறிவிப்புகளும் பட்ஜெட்டில் இல்லை.

தேசிய பேரிடர் பாதிப்புகளை அதிகம் கொண்ட மாவட்டமான நாகைக்கு பயிர்க் காப்பீட்டுக்கான முன் நிதி ஒதுக்கீட்டை தமிழக அரசு அறிவித்திருக்க வேண்டும்.

உயர்ந்து விட்ட உற்பத்தி செலவுகளை கணக்கிட்டு, பயிர் கடன் நிதி ரூ.5 ஆயிரம் கோடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ரூ.4,500 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

கடன் அளவீட்டு வரம்பு உயர்வுப்படி பயிர்க் கடன் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. பயிர்க் கடனுக்கான நிதி ஒதுக்கீடு விவசாயிகளுக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளிக்கிறது என்றார் அவர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

23.03.2013 A.M

---

## தாவரங்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

நாமக்கல், : கொல்லிமலையில் தாவரங்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது.

கொல்லிமலை வாழவந்தி நாட்டில், சென்னை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர் உரிமை சட்டம் குறித்த ஒரு நாள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. கருத்தரங்கிற்கு நபார்டு வங்கி துணை பொதுமேலாளர் பூவராகவன் தலைமை வகித்தார். ஆராய்ச்சி நிறுவன முதன் மை விஞ்ஞானி கீதாராணி கருத்தரங்கை துவக்கி வைத்தார். வேளாண் துறை உதவி இயக்குனர்கள் சவுந்தரராஜன், அசோகன், ஆரா ய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி இஸ்ரேல் ஆலிவர் கிங் ஆகியோர் கருத்துரையாற்றினர். இக்கருத்தரங்கில், தாவரங்கள் பாதுகாப்பு மற்றும் உழவர் உரிமை சட்டம் குறித்த விளக்கம், விவசாயிகள் தங்கள் பயிர் ரகங்களை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும், பராம்பரிய நெல், சிறுதானியம், குழு பணப் பயிர் ஆகியவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் வேளாண் துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## மானிய விலையில் வேளாண் கருவிகள் விவசாயிகளுக்கு விநியோகம்

நாமக்கல், : விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

மோகனூர் ஒன்றியம், ஒருவந்தூர் ஊராட்சியில் வேளாண் துறை மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ஆதிதிராவிட விவசாய குழுவிற்கு முழுமானியத்துடன் கூடிய வேளாண் கருவிகள் வழங்கப்பட்டது.

இதற்கான விழாவிற்கு ஒருவந்தூர் ஊராட்சி மன்றதலைவர் செல்ல.ராசாமணி தலைமை வகித்து, விவசாயிகளுக்கு பவர்டிரில்லர் கருவியை வழங்கினார். அதை குழுதலைவர் பழனிமலை மற்றும் உறுப்பினர்கள் பெற்று கொண்டனர்.

இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன், ஊர் தர்மகர்த்தா சுப்பிரமணியம், ஊர்பிரமுகர்கள் ராஜேந்திரன், பெரியசாமி, ஆசிரியர் சதாசிவமூர்த்தி, ஊராட்சிமன்ற துணைத்

தலைவர் சரவணன், வேளாண் அலுவலர்கள் ஹேமலதா, மணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மோகன்ராஜ், சந்திரசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டத்தில் கடும் வறட்சி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

ஈரோடு, : வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் என்று ஈரோட்டில் நடந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டதில் வலியுறுத்தப்பட்டது. ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் விவசாயிகள் தரப்பில் பேசியதாவது:

பருவமழை பொய்த்து போனதால் மாவட்டம் முழுவதும் கடும் வறட்சி நிலவி வருகிறது. எனவே வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரண தொகையை வழங்க வேண்டும். சாய, தோல் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் குடிநீர் மாசு படிந்து வருகின்றது. சுண்ணாம்பு ஓடை, பிச்சைக்காரன்பள்ளம் ஓடை உள்ளிட்டவைகளில் கழிவுநீர் அதிக அளவில் செல்கின்றது.

வனப்பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் வனவிலங்குகள் சமவெளிகளுக்கு படையெடுத்து வருகின்றன. இதை தடுக்க வன எல்லைப்பகுதியில் அகழிகளை வெட்ட வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பவானி ஆற்றில் அதிக அளவில் மணல் திருட்டு நடைபெற்று வருகிறது. குறிப்பாக சேர்வராயன்பாளையத்தில் தினந்தோறும் மணல் திருட்டு நடக்கிறது. இதை தடுக்க வருவாய்த்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மகாத்மாகாந்தி வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்தில் குறைந்த அளவில் கூலி வழங்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தி முறையாக கூலி வழங்க வேண்டும்.

காலிங்கராயன் பாசன பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாட்டினால் 30 சதவீத அளவுக்கு சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மஞ்சள் சாகுபடி பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். நீர்நிலைகளுக்கு அருகில் தொழிற்சாலைகள் தொடங்க தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த தடையை விலக்க மாசுகட்டுப்பாட்டு வாரியம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இந்த

தடையை தொடர்ந்து நீட்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு விவசாயிகள் தரப்பில் பேசினர்.

## நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

நாகை,: நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி முகாம் ஏப்ரல் 1ம்தேதி முதல் 21ம்தேதி வரை நடைபெறுகிறது.
இதுகுறித்து நாகை கலெக்டர் முனுசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:
தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களிலும் பசு மற்றும் எருமைகளுக்கு தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின்கீழ் கடந்த ஜூலை மாதம் தொடங்கி 3 சுற்று தடுப்பூசி போடும் பணி முடிவடைந்துள்ளது. தற்போது 4வது சுற்று தடுப்பூசி போடும் பணி வரும் ஏப் ரல் 1ம்தேதி முதல் 21ம் தேதிவரை முகாம் நடைபெற உள்ளது. இதற் காக கோமாரி நோய்க்கான ஊநீர் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள குளிரூட்டும் அறை களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.
அங்கிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசி குழுவினர் கொண்டு சென்று அனை த்து பசு மற்றும் எருமைகளுக்கு போட உள்ளனர்.
இது தொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த சிறப்பு கிராம சபா கூட்டம் நடத்தப்பட உள்ளது. கூட்டத்தில் கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டு கால்நடை மருத்துவர்கள் கூறும் அறிவுரைப்படி கால்நடைகளை அவர்கள் குறிப்பிடும் தேதியில் குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்துச்சென்று தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும்.
நாகை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களுடைய பசு, எருது மற்றும் 4 மாதத்திற்குட்பட்ட இளங்கன்றுகளுக்கு வரும் ஏப்ரல் 1ம்தேதி முதல் 21ம்தேதிக்குள் ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் தங்கள் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசியை போட்டு பயன்பெறலாம் என்று கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

## நிலத்தடி நீர்மட்டம் சரிவால் மானாவாரி?பயிர்?சாகுபடியில் கவனம்?செலுத்தும்?விவசாயிகள்

கம்பம், : கம்பம் பகுதியில் சுட்டெரிக்கும் வெயிலால் நிலத்தடி நீர்மட்டம் சரிந்து வருகிறது. இதனால் விவசாயிகள் காய்கறி பயிரிடுவதை தவிர்த்து, மானாவாரி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
கம்பம் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் நெல், தென்னை, வாழை, திராட்சை மற்றும் அதிகளவு

காய்கறிகள் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் முல்லைப் பெரியாறில் போதிய நீர்வரத்து இல்லை. இப்பகுதியைச் சுற்றிலும் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது. நடுத்தர விவசாயிகள் ஆழ்துளைக் கிணறு, மின்மோட்டார் அமைத்து, குறைந்த காலத்தில் வளரும் பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறி பயிர்களையே அதிகளவு பயிரிட்டு வருகின்றனர்.

தற்போது வெயில் கடுமையாக உள்ளது. காய்கறி பயிர்களுக்கு 4 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டியுள்ளது. இந்நிலையில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக, பயிர்களை வளர்க்க வழியின்றி விவசாயிகள் சிரமம் அடைந்து வருகின்றனர். இதனால், பெரும்பாலான விவசாயிகள் மானாவாரி பயிர்களான மக்காச்சோளம், வெள்ளை சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை உள்ளிட்ட பயிர்களை விதைத்து வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், “கடந்த சில ஆண்டுகளாகவே தண்ணீர் பற்றாக்குறை மற்றும் மின்தடை காரணமாக பலர் விவசாயத் தொழிலை விட்டு வேறு தொழிலுக்கு மாறிவிட்டனர். எந்தக் காய்கறி பயிரிட்டாலும் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் இருந்தால் தான் சமாளிக்க முடியும். ஆனால் தற்போது நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டதால் அதிக நாட்கள் தண்ணீர் இல்லாமல் இருந்தாலும் தாங்கும் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்கிறோம். இதில் அதிகளவு மக்காச்சோளம் பயிரிட்டு, கதிர் பிடிக்கும் தருவாயில் தட்டைகளை இப்பகுதியில் உள்ள கறவை மாடுகளுக்கு தீவனமான விற்பனை செய்து வருகிறோம்“ என்றனர்.

## வனவிலங்குகளால் விளைநிலம் சேதம் விண்ணப்பித்தால் 3 நாட்களில் நிவாரணம் 4 மணி நேரம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் உறுதி

நாகர்கோவில், : குமரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலக நாஞ்சில் அரங்கில் கலெக்டர் நாகராஜன் தலைமையில் நடந்தது. கலெக்டரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்சென்ட் சேம், வேளாண்மைத் துறை இணை இயக்குனர் செய்யது அகமது மீரான்ஜி, பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர் விஜயகுமார், நீர்ப்பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள், விவசாயிகள் மருங்கூர் செல்லப்பா, புலவர் செல்லப்பா, செண்பகசேகர பிள்ளை, ஆரோன், டேவிட் ஜெயசிங், முருகேச பிள்ளை, குணசீலன், தங்கப்பன், விஜி, தங்கராஜா, ஸ்ரீகிருஷ்ண பெருமாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், விவசாயிகள் தரப்பில் பேசியதாவது, குமரி மாவட்டத்தை வறட்சி குழுவினர் புறக்கணித்தது கண்டிக்கத்தக்கது. நீர்நிலைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் வளர்ச்சி பணிகளை

மேற்கொள்வது எப்படி என்பது குறித்து நகராட்சி பொறியாளர்கள் உள்பட உள்ளாட்சி அதிகாரிகளுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள்  மூலம் பயிற்சி அளிக்க வேண்டும்.  குமரியில் ஆக்கிரமிப்பு குளங்கள் அகற்ற பொதுப்பணித்துறைக்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னரும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வில்லை.

யானைகள் மட்டுமின்றி காட்டுப்பன்றி போன்ற வனவிலங்குகளால்  விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். எனவே இதற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். ராஜாக்கமங்கலம் பகுதியில் கால்வாய் குறுக்கே தொடர்ச்சியாக ரியல் எஸ்டேட் அதிபர்களால் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் கால்வாய் அகலம் குறைவதுடன், மேல்பகுதியில்பீம்கள் தாழ்வாக அமைக்கப்படுவதால் நீர் செல்வதில் சிக்கல் ஏற்படுகிறது. தாமரை இலைகளை பயிரிட குமரியில் மட்டும்தான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும். கூட்டுறவு கடன் சங்கங்களில் கம்ப்யூட்டர் வசதி ஏற்படுத்த வேண்டும். தோவாளை கால்வாயில் தண்ணீர் விட 15.2.13 அன்று கோரிக்கை மனு அளிக்கப்பட்டது அப்போது தண்ணீர் இல்லை எனக்கூறினர்.  தற்போது  பிப்.28ம் தேதி என்.பி கால்வாயில் தண்ணீர் விடப்பட்டுள்ளது. இப்போது மட்டும்  தண்ணீர் எங்கிருந்து வந்தது. இதனை நாங்கள் கேட்டபோதே விட்டிருந்தால் ஆயிரம் ஏக்கர்  பயிர்கள் காப்பாற்றப் பட்டிருக்கும். கண்கெடும் முன் நடவடிக்கை வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நெல் மூட்டைகளை பாதுகாக்க விவசாய அடையாள அட்டை இருந்தும் வி.ஏ.ஓ சான்று கேட்கின்றனர். 3 கிராமங்களுக்கு ஒரு வி.ஏ.ஓ என்பதால் அவர்களை தேடி பிடித்து சான்று பெறுவதற்கு மாதக்கணக்கில் ஆகிறது. தேரூர், தாழக்குடியில் நெல்கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டது பற்றி தகவல் இல்லை.

இதற்கு பதில் அளித்து கலெக்டர் பேசியதாவது:

யானைகள் மற்றும் வனவிலங்குகளால் சேதம் அடைந்த விளை நிலங்களின் விவசாயிகள் திங்கட்கிழமை மனு அளித்தால் வியாழனுக்குள் நிவாரணம் கிடைக்கும். ஆக்கிரமிப்புகள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தென்னை விவசாயத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் இழப்பீடு வழங்கப்படும்.  குளங்களை விவசாயம் மட்டுமின்றி, தாமரை வளர்த்தல், மீன்கள் வளர்த்தல் என பல்வேறு பயன்பாடுகளுக்கு பயன்படுத்தலாம் என்பதே எனது கருத்து. எனவே தாமரை இலை வளர்க்க அனுமதிப்பது பற்றி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது. பாலங்கள் தனியார்கள் அவர்கள் செலவில் அமைப்பதை தடை செய்ய முடியாது. அதே நேரத்தில் தண்ணீர் செல்ல இடையூறாக கால்வாய் அளவை குறைத்தாலோ, அரசு சொத்துக்கு சேதம் ஏற்படுத்தினாலோ நடவடிக்கை

மேற்கொள்ளப்படும். கரையோர மரங்களை வெட்டினால் போலீசார் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 1952ம் ஆண்டுக்குப் பின் கடும் வறட்சி ஏக்கருக்கு ரூ5 ஆயிரம் மானியம் வழங்கி பயிர் கடன்கள் தள்ளுபடி செய்ய வேண்டும்

திருப்பூர், : 1952ம் ஆண்டுக்குப் பின் திருப்பூரில் கடும் வறட்சி நிலவுகிறது. பிற மாவட்டங்களைக் காட்டிலும் திருப்பூர் மாவட்டம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ5 ஆயிரம் மானியம், கால்நடை தீவனத்திற்கு மானியம் வழங்கி பயிர்கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், கலெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. திட்ட அலுவலர் சம்பத், வேளாண்மை இணை இயக்குநர் முகம்மது கலிபுல்லா ஷெரீப், துணை இயக்குநர் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். கூட்டம் துவங்கியதும், கடந்த மாதத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து விவசாயிகள் பல்வேறு பிரச்னைகள் குறித்து பேசினர்.

மனோகரன் (விவசாயி): கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து கொப்பரை கொள்முதலை நேபெட் நிறுவனம் நிறுத்திவிட்டது. இதனால் வெளி மார்க்கெட்டில் விலை சரிந்து விட்டது. ஆகவே தாங்கள் இது விஷயத்தில் தலையிட்டு நேபெட் நிறுவனம் கொள்முதலை மீண்டும் துவங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடும் வறட்சியால் மக்காச்சோளம் மற்றும் மானாவாரி பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே ஆய்வு குழுவினரிடம் தெரிவித்து, உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

துரைசாமி (விவசாயி): கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு வரை திருமூர்த்திமலை பகுதியில் இருந்து, பொதுப்பணித்துறை அனுமதியுடன், இலவசமாக வண்டல் மண் எடுத்து விவசாய நிலங்களுக்கு உரமாக பயன்படுத்தி வந்தோம். ஆனால் தற்போது வண்டல் மண் எடுக்க அனுமதிப்பதில்லை. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். ஆகவே மீண்டும் வண்டல் மண் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலரவன் (விவசாயி): உடுமலை பூலவாடி துணைமின் நிலையத்தில், அரை மணி நேரத்திற்கு ஒருமுறை மின் தடை ஏற்படுவதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிங்காரம் (விவசாயி): மினி டிராக்டர் ஒரு சிறிய வாகனம். இந்த வாகனத்தை பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், வாகன நிறுவனத்தினர் தற்காலிக பதிவுக்கே ரூ.3,500 பெறுகின்றனர். மேலும் இன்ஸ்சூரன்சுக்கு ரூ.500, மாறுதலுக்கு ரூ.2 ஆயிரம் என கேட்கிறார்கள்.

பாலசுப்பிரமணியம் (விவசாயி): மாநிலத்திலேயே வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருப்பூர் மாவட்டம் தான். நாங்கள் பெரிதாக எதையும் எதிர்பார்க்கவில்லை. கனிவான வார்த்தைகளை தான் எதிர்பார்க்கிறோம். 1952ம் ஆண்டுக்கு பிறகு இதுபோன்று வறட்சி பாதித்ததில்லை. விவசாயிகள் அரசியல்வாதிகளை நம்புவதில்லை. உங்களைப் போன்ற அதிகாரிகளை தான் நம்புகிறோம். பெருந்தொழுவு கரட்டுப்பாளையம் பகுதியில், கடந்த சில நாட்களாக ஒரு நபர் மின் ஒயரை தீயிட்டு கொளுத்தி வருகிறார். இதனால் சுற்றுப்புற சூழல் பாதித்துள்ளது. இதை தட்டிக்கேட்கும் நபர்களை அந்நபர் மிரட்டி வருகிறார். அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுப்பிரமணி (விவசாயி): சத்தியமங்கலம் தாலுகாவில், சிட்டா அடங்கல் வழங்க ரூ.20 வசூல் செய்கின்றனர். அதற்கு முறையாக ரசீதும் வழங்குகின்றனர். ஆனால் அவிநாசி தாலுகாவில், சிட்டா அடங்களுக்கு ரூ.20 வசூல் செய்துவிட்டு, அதற்கு ரசீது தராமல், ஒரு வெள்ளைத்தாளில் ரூ.20 பெற்றுக்கொண்டதாக எழுதி தருகின்றனர். இப்படி வசூல் செய்யப்படும் பணம் எங்கு செல்கிறது என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

மணி (விவசாயி): தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள வறட்சி பாதிப்பு மாவட்டங்களில் திருப்பூரும் உள்ளது. ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் வழங்க வேண்டும். பயிர் கடன்கள் தள்ளுபடி செய்ய வேண்டும். கால்நடை தீவனம் மானியத்துடன் வழங்க வேண்டும்.

## காங்கயம் பகுதியில் வறட்சி நிவாரணகுழு ஆய்வு

திருப்பூர், : காங்கயம் பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை வறட்சி நிவாரண ஆய்வு குழுவினர் நேற்று பார்வையிட்டனர்.

மழை பொய்த்ததால் தமிழகம் முழுவதும் கடும் வறட்சியின் காரணமாக பயிரப்பட்ட நெல், கரும்பு, சோளம் போன்ற அணைத்து பயிர்களும் தண்ணீர் இன்றி கருகிப் போனது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். இதையடுத்து இவர்கள் தங்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர்.இதனையடுத்து தமிழக முதல்வர் ஜெயலலிதா சென்னை நீங்கலாக தமிழகத்தின் அனைத்து மாவட்டப் பகுதிகளையும் வறட்சிப பகுதியாக அறிவித்தார். இதன் தொடர்ச்சியாக அமைச்சர்கள் அடங்கிய உயர்மட்டக்

குழு அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டமாக நேரில் சென்று விவசாயிகளின் வறட்சி நிலைமை குறித்து ஆய்வு நடத்தி வருகிறது.

இந்நிலையில, தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் மின்சாரத்துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம், வருவாய்த்துறை அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன், இந்து அறநிலையத்துறை அமைச்சர் ஆனந்தன், வீட்டு வசதித்துறை அமைச்சர் வைத்திலிங்கம் அடங்கிய அமைச்சர் குழு திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், ஆலாம்பாடி ஊராட்சிக்கு உள்பட்ட குப்பைக் கவுண்டன்வலசு கிராமத்தில் உள்ள விவசாயி நாச்சிமுத்துக்கு சொந்தமான முற்றிலும் கருகிப் போன ஒரு ஏக்கர் கரும்பு வயலையும் மற்றும் பொத்தியபாளையம் ஊராட்சிக்கு உள்பட்ட காடையூர் கிராம விவசாயி சாந்தா மணிக்கு சொந்தமான 3 ஏக்கர் சோளம் பயிரடப்பட்ட கருகிய நிலத்தையும் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். திருப்பூர் மாவட்டத்தில் 45 ஆயிரத்து 593 ஹெக்டேர் வேளாண்மை நிலங்களில் பயிரப்பட்ட நெல், கரும்பு, மஞ்சள், சோளம் போன்ற பயிர்கள் கருகி உள்ளது. இதில் 76 ஆயிரத்து 755 விவசாயிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். மானாவரி மற்றும் இரவை பூமிகளில் பயிரப்பட்டுள்ள 50 சதவீததிற்கு மேற்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்று மாவட்டத் நிர்வாகம் மூலம் அமைச்சர் குழுவிடம் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் மாவட்ட கூடுதல் தலைமைச் செயலர் டி.எஸ்.ஸ்ரீதர், வருவாய்துறை முதன்மை செயலர் ராஜிவ் ரஞ்சன், வேளாண்மைத்துறை செயலர் சந்தீப் சக்சேனா, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் விஜயகுமார், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் பழனிசாமி, திருப்பூர் மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ், காங்கயம் எம்.எல்.ஏ.,நடராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டத்தில் 39,352 எக்டேர் பரப்பில் நெல் அறுவடை நிறைவு

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் 39,352 எக் டேர் பரப்பில் நெல் அறு வடை பணிகள் நிறைவடைந்துள்ளதாக கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்தார்.

திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்து பேசியது:

திருச்சி மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி 44, 686 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை பணி நடைபெற்று வருகி றது. இதுவரை 39,352 எக் டேரில் அறுவடை பணிகள்

நிறைவடைந்துள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சூரிய சக்தி யின் மூலம் இயங்கும் 36 பம்ப்செட்கள் டெல்டா பகுதி வட்டாரங்களில் 80% மானியத்தில் வழங்க இலக்கு பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

நடப்பு பருவத்திற்கு தேவையான உரங்கள், யூரியா 5,707 மெ.டன், டிஏபி 5,889 மெ.டன், பொட்டாஷ் 2,829 மெ.டன் மற்றும் கூட்டுரம் 3,594 மெ.டன் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளா ண்மை கூட்டுறவு வங்கி மற் றும் தனியார் உரக்கடைகளிலும் போதிய இருப்பு உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில், டிஆர்ஓ தியாகராஜன், வேளாண் இணை இயக்குனர் சேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) பாண்டியராஜன், கால் நடை துறை மண்டல இணை இயக்குனர் நாக ராஜ், தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகர், வேளாண் பொறி யியல் துறை செயற்பொறி யாளர் தியாகராஜன், மின் சார வாரிய மேற்பார்வை பொறியாளர் முத்தமிழ்செல்வன் மற்றம் பலர் கலந்து கொண்டனர்.

50% மானியத்தில்

காய்கறி விதைகள்

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 2,025 எக்டேர் பரப்பில் ரூ.45 லட்சம் மதிப்பிலான உயர் விளைச்சல் தரும் காய்கறி விதை கள் மற்றும் வீரிய ஒட்டு ரக காய்கறி விதைகள் மற்றும் பழக்கன்று கள் 50 சத மானிய விலை யில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும் கலெக்டர் கூறினார்.

## நவீன அரிசி ஆலைகளுக்கு அரவை செய்ய கொள்முதல் நெல்லை வழங்க வேண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டத்தில் நலிவடைந்து வரும் நவீன அரிசி ஆலைகளையும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களையும் பாதுகாக்க கொள்முதல் செய்யப்படும் நெல்லை அரவைக்கு வழங்க வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஐ.வி. நாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

காவிரி டெல்டா மாவட்டங்களில் கடைமடை பகுதி திருவாரூர் மாவட்டம். முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள மாவட்டம். காவிரி நீரின் வரத்தை ஒட்டியே இந்த மாவட்டத்தின் பொருளா தார நிலை இருக்கும்.

பாசனத்திற்கு பிரச்னை இல்லாத ஆண்டுகளில் மாவட்டத்தில் சாகுபடி பணிகள் தீவிரமாக நடப்பதும், அதன் காரண மாக குறிப்பிட்ட இலக்கையும் தாண்டி நெல் கொள் முதல் ஆவதும் வாடிக்கை. இதில் அரசின் இரட்டை கொள்முதல் காரணமாக தனியார் நெல் கொள்முதல் செய்வதும் உண்டு.

தற்போது இந்தாண்டு காவிரி பாசன மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக கொள் முதல் இலக்கு மிக மோசமாக சரிவடைந்துள்ளது. வழக்கமாக கொள்முதல் செய்வதில் கால் சதவீதம் மட்டுமே திருவாரூர் மாவட்டத்தில் இந்தாண்டு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்ட பாசனத்தையும், அறுவடையையும் நம்பி தனியார் நவீன அரிசி ஆலைகள் செயல் பட்டு வருகிறது. இந்த ஆலைகளுக்கு அரசின் மூலமாக வழங்கப்படும் அரவை பணியை நம்பி ஆலை முதலாளிகள் உள்ளனர். இந்த ஆலைகளை நம்பி தான் மாவட்டம் முழுவதும் 5, தொழிலாளர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றி வருகின்றனர். வழக்கமாக தரப் படும் அரவை சதவீதத்தை கொண்டு வாழ்க்கையை இருதரப்பினரும் ஓட்டி வந்துள்ளனர். ஆனால் இந்தாண்டு கொள்முதலும் குறைந்துள்ள நிலையில் அரவை பணியும் வெளிமாவட்ட ஆலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நவீன அரிசி ஆலைகளில் போதிய வேலை இல்லை. இதனால் ஆலை முதலாளிகள், தொழிலாளர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே திருவாரூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை இங்குள்ள நவீன அரிசி ஆலைகளில் அரவைக்கான வாய்ப்பை வழங்கி நலிந்து வரும் நவீன அரிசி ஆலை களை பாதுகாக்க வேண்டும். இந்த ஆலைகளை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் நாகராஜன் தெரிவித்துள்ளார்.

## மாவட்டத்தில் பசுமை பகுதியை பார்வையிட்ட வறட்சி நிவாரண ஆய்வுக்குழு குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்

திண்டுக்கல், : ஆறு அமைச்சர்கள் கொண்ட வறட்சி நிவாரண ஆய்வுக் குழு, பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடாமல், பசுமை பகுதிகளை பெயரளவிற்குப் பார்த்துச் சென்றதாக குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

திண்டுக்கல்லில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகிக்க, டிஆர்ஓ மனோகரன் முன்னிலை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார் வரவேற்றார்.

கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த புகார்:

வறட்சி நிவாரண ஆய்வுக்குழு வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்க்கவில்லை. மலையடிவாரம் உள்ள செழுமையான பகுதிகளைப் பெயரளவிற்குப் பார்த்து விட்டுச் சென்றுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். இதுபோன்ற ஆய்வின் போது விவசாயிகளுக்கும் தகவல் தெரிவித்து உரிய முறையில் ஆய்வு செய்ய வேண்டும்.

டிஆர்ஓ மனோகரன் பதிலளிக்கையில், ஒரே நாளில் 3 மாவட்டங்களுக்கு இந்த ஆய்வுக்குழு செல்ல வேண்டியிருந்ததால் குறிப்பிட்ட பகுதியை மட்டும் பார்த்துச் சென்றனர்.

வேளாண் இணை இயக்குநர் சம்பத்குமார்: மாவட்டம் முழுவதும் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு பாதித்த பகுதிகள், பயிர் வகைகள் உள்ளிட்ட விபரங்கள் போட்டோவுடன் அறிக்கையாக அக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம்  கிடைக்கும் என்றார். 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மட்டுமே நிவாரணம் என்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறை, போதிய மழையின்மை உள்ளிட்ட காரணங்களால் ஏராளமான விவசாயிகள் பயிர் செய்ய முடியாமல் பரிதவித்து வருகின்றனர். அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் வரி ரத்து ரசீதான அன்னாவாரி சான்றிதழை உடனடியாக வழங்க வேண்டும். மா, வாழை உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

டிஆர்ஓ கூறுகையில், இந்த சான்றிதழை உடனடியாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து தாசில்தார்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஏஓ மூலம் உடனடியாக வழங்கப்படும் என்றார்.

சண்முகநதியில் நீர் திறந்துவிடும் போது மோட்டார் மூலம் நீர் அதிகளவில் திருடப்படுகிறது. பொதுப்பணித்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பிலே இது நடக்கிறது என விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

பொதுப்பணித்துறை (நங்காஞ்சியார்) செயற்பொறியாளர் சந்திரமோகன்: மின்வாரியத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் சென்றதும் மீண்டும் மோட்டாரைப் பயன்படுத்தி இச்செயலில் ஈடுபடுகின்றனர். விவசாயத்திற்கான தண்ணீரை தவறான வழியில் பயன்படுத்த அதிகாரிகள் ஒத்துழைப்பது இல்லை. அவ்வாறு செய்தால் அதிகாரிகளின் சட்டையைப் பிடித்து தட்டிக்கேட்கலாம் என்றார். இந்த பதிலால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

திருட்டுத்தனமாக ஆற்றில் நீர் திருடும் செயல் தொடர்ந்து நடைபெறுவதால் இப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க பொதுப்பணித்துறை, ஆயக்கட்டு விவசாயிகளை ஒருங்கிணைத்து ஆலோசனைக் கூட்டம் நடத்த கலெக்டர் உத்தரவிட்டார். தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்கள் சந்திரசேகரன், ராஜாமுகமது உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

23.03.2013 A.M

---

## உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 2120 பேருக்கு ரூ.90 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்

துறையூர்

உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2ஆயிரத்து 120 பேருக்கு ரூ. 90 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பூனாட்சி வழங்கினார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

துறையூரில், உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பல்வேறு நல திட்டஉதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை தாங்கினார். துறையூர் ஒன்றியக்குழு தலைவர் பொன்.காமராஜ், உப்பிலியபுரம் ஒன்றியக்குழு தலைவர் லலிதா செல்லமுத்து, உப்பிலியபுரம் ஒன்றிய செயலாளர் அழகாபுரி செல்வராஜ், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் விஜயா பொன்னர், ஆனந்தி கணேசன், சுலோச்சனா ராமச்சந்திரன், தறையூர் ஒன்றியக்குழு துணைத்தலைவர் பாலசுப்ரமணியன், பேரூராட்சி தலைவர் மைதிலி அன்பரசு, துறையூர் நகர செயலாளர் செக்கர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முசிறி உதவி கலெக்டர் முஸ்தபா கமால்பட்சா வரவேற்றார்.விழாவில் அமைச்சர் டி.பி.பூனாட்சி கலந்து கொண்டு 2120 பயனாளிகளுக்கு ரூ.89 லட்சத்து 8 ஆயிரத்து 300 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அவர் பேசியதாவது:–

கலந்து கொண்டோர்

அவர் பேசும்போது, தமிழக முதல்–அமைச்சர். ஏழை– எளிய மக்களுக்காகவும், விவசாயிகளுக்காகவும் பல்வேறு திட்டங்களை தீட்டி அந்த திட்டங்கள் மக்களுக்கு நேரடியாக சென்றடைய தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றார். அரசு தலைமை கொறடா மனோகரன் எம்.எல்.ஏ., இந்திராகாந்தி எம்.எல்.ஏ. ஆகியோரும் பேசினார்கள்.விழாவில் முன்னாள் அமைச்சர் சரோஜா, மாவட்ட ஊராட்சி தலைவர் ராஜாத்தி, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற

துணை தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர் வேம்பு ரெங்கராஜ், ஒன்றிய அவைத்தலைவர் தேவராஜன், ஒன்றிய எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் சேனை செல்வம், அண்ணா தொழிற்சங்க மண்டல செயலாளர் நகாராஜ், மாவட்ட பிரதிநிதிகள் கணேசன், ரெங்கநாதன், சந்திரசேகரன், தனம், முன்னாள் ஊராட்சி தலைவர் மோகன்தாஸ், செந்தில்குமார், முன்னாள் நகர செயலாளர்கள் செல்வம், கவிதை மணி, கிளை செயலாளர் ஆனந்தகுமார், தர்மராஜ், ஊராட்சி தலைவர்கள் தனகுமார், முருகையா, சரசு பழனியாண்டி, சதீஷ்குமார், ஒன்றிய கவுன்சிலர்கள் ரமேஷ், செல்வம், பாக்கியம், தனலட்சுமி, முன்னாள் எம்.எல்.ஏ.அரங்கராஜன், பொதுக்குழு உறுப்பினர் சரோஜா இளங்கோவன், வக்கீல் செந்தில்குமார், தமிழ்ச்செல்வன், மார்க்கெட் சரவணன், துறையூர் தாசில்தார் உஷா, மண்டல தாசில்தார் அசோக்குமார், கஸ்தூரி ரெங்கன், வருவாய் ஆய்வாளர்கள், விக்னேஷ், செல்வகனேஷ், வீரப்பன், ஆனந்த், உள்பட பலர் கலந்து கொண்டார்கள். முடிவில் வருவாய் ஆய்வாளர் ராமு நன்றி கூறினார்.

## வயிற்றுப்போக்கு, நோய் பரப்பும் ''கார்பைடு'' வைத்து பழுக்க வைத்த மாம்பழம் விற்றால் கடும் நடவடிக்கை போலீஸ் சூப்பிரண்டு எச்சரிக்கை

மதுரை

வயிற்றுபோக்கு, நோய்பரப்பும் ''கார்பைடு'' வைத்து பழுக்க வைத்த மாம்பழங்களை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீஸ் சூப்பிரண்டு பாலகிருஷ்ணன் எச்சரித்துள்ளார்.

வயிற்றுவலி

கோடைகாலம் தொடங்கி விட்ட நிலையில் பழக்கடைகளில் மாம்பழம் விற்பனை தொடங்கி உள்ளது. விரும்பி சாப்பிடும் ஆர்வத்தில் மாம்பழம் இயற்கையாக பழுக்க வைக்கபட்டதா அல்லது செயற்கையாக வேதிப்பொருள் கொண்டு பழுக்க வைக்கப்பட்டதா என்பதை பார்க்காமல், தெரியாமல் வாங்கிச்செல்கின்றனர்.செயற்கையாக ''கார்பைடு''போன்ற பொருட்களால் பழுக்க வைத்த மாம்பழங்களை சாப்பிடுவதால் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு மற்றும் சில நோய்களால் அவதிக்குள்ளாகிறார்கள். அதனால் உடலுக்கு தீங்கு விளைவிக்கிறது. எனவே இயற்கையாக பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் அல்லது மாங்காய்களை வாங்கி தாங்களே பழுக்க வைத்து சாப்பிட வேண்டும். மதுரை மாவட்டத்தில் உள்ள பழ வியாபாரிகள் வியாபார நோக்கை மட்டும் கருத்தில் கொள்ளாமல், பொதுமக்கள் நலன் கருதி இயற்கையாக பழுக்க வைத்த மாம்பழங்களையே விற்பனை செய்ய வேண்டும்.

நடவடிக்கை

அவ்வாறு இல்லாமல் ''கார்பைடு'' போன்ற வேதிப்பொருளை கொண்டு செயற்கையாக பழுக்க வைத்து மாம்பழம் விற்பனை செய்யும் வியாபாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பாலகிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## தேனி மாவட்டத்தில் வங்கிகளில் விவசாய கடன் வழங்க ரூ.2 ஆயிரத்து 250 கோடி ஒதுக்கீடு கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தகவல்

தேனி,

தேனி மாவட்டத்தில் வங்கிகளில் விவசாயி களுக்கு கடன் வழங்க ரூ.2 ஆயிரத்து 250 கோடியே 89 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளதாக மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தெரி வித்து உள்ளார்.

வங்கியாளர்கள் கூட்டம்

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வங்கியாளர் கள் கூட்டம் நடந்தது. கூட்டத் தில் மாவட்ட கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி தலைமை தாங்கி ஆண்டு கடன் திட்டத் திற்கான புத்தகத்தை வெளி யிட்டு பேசினார். அப்போது அவர் கூறிய தாவது:

வங்கிகள் கடன் வழங்கும் போது தாமதம் செய்யக் கூடாது. விவசாயிகளுக்கும், கல்வி கடன் பெறுபவர் களுக் கும் விரைவில் கடன் வழங்க வேண்டும். தேனி மாவட்டத் திற்கு 201314ம் ஆண்டுக்கு பயிர்கடனாக ரூ.1,234 கோடியே 98 லட்சமும், மலை மற்றும் தோட்டக்கலை பயிர் களுக்காக ரூ.262 கோடியே 35 லட்சமும், பண்ணை இயந்திரக் கடன்களுக்காக ரூ.180 கோடியே 6 லட்சமும், பாசன வசதிக்காக ரூ.81 கோடியே 93 லட்சமும், நிலச்சீர்திருத்த கடனுக்காக ரூ.76 கோடியே 28 லட்சமும் என வேளாண்மை கடன்களுக்கு ரூ.1,862 கோடியே 34 லட்சமும், வேளாண்மை சார்ந்த தொழில் களுக்கு ரூ.388 கோடியே 35 லட்சமும் என விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ.2,250 கோடியே 89 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

வேளாண்மை சார்ந்த தொழில்களில் பால் பண்ணை அபிவிருத்தி கடனுக்காக ரூ.177 கோடியே 12 லட்சமும், கோழிப்பண்ணை கடனுக்காக ரூ.43 கோடியே 49 லட்சமும், ஆடுகள், பன்றிகள் மற்றும் மீன் வளர்ப்பதற்காக ரூ.52 கோடியே 35 லட்சமும் ஒதுக் கீடு செய்யப்பட்டு உள்ளது.

ரூ.2,706 கோடி கடன்

பண்ணைசாரா கடனாக சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ.154 கோடியே 64 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. மேலும் முன்னுரிமை கடன் களாகிய கல்விக்கடன், சிறு

வணிகக் கடன், தனிநபர் கடன் மற்றும் சுயஉதவிக் குழுக் களுக்கு கடன் ஆகிய வற்றிற்கு ரூ.301 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

வணிக வங்கிகள் மூலமாக ரூ.2,492 கோடியே 5 லட்சம், கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.277 கோடியே 48 லட்சம் என மொத்தம் ரூ.2,706 கோடியே 53 லட்சம் மதிப்பில் கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இந்த கடன் நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டின் ஒதுக்கீட்டை விட 22.06 சத வீதம் அதிகம் ஆகும். அதாவது இது கடந்த ஆண்டை விட ரூ.369 கோடியே 58 லட்சம் அதிகம் ஆகும். இவ்வாறு கலெக்டர் கே.எஸ்.பழனிசாமி பேசினார்.

கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் முருகேசன், கனரா வங்கி துணை பொது மேலாளர் லட்சுமிபதிகுமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மகேந்திரன், பாரத ரிசர்வ் வங்கி மேலாளர் பங்கஜ்குமார், கனரா வங்கி முதன்மை மேலாளர் ஹரிராம் ஷெனாய் மற்றும் அனைத்து வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.